IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சோ. தர்மன் படைப்புகளில் வேளாண்மைக் கருவிகள்

## AGRICULTURAL TOOLS

**S.Kannaki**

Ph.D. Research Scholar (Part Time), REGN NO: MKU21PFOL9987

Research Centre of Tamil, Fatima College, Madhurai.

(Affiliated to MK University, Madhurai)

**Dr.K.Latha**

Research Adviser, Head and Associate Professor,

Research Centre of Tamil, Fatima College, Madhurai.

**Abstract :** Human society has been farming for thousands of years. Agriculture is the first art form discovered by the human race. Historical anthropologists say that agriculture may have led mankind to the path of civilization, from which other arts may have emerged. This claim is also the subject of lengthy debate . The article seeks to explore the agricultural tools of thenovel Dhoorvai,Kugai and Sool in terms of the agricultural tools Realized by dharman's works. Agriculture is derived from the word 'sword'. The Tamil lexicon explains that agriculture also means grand and charity. Page 1518 in Singaravelu Muthaliyar Abidhanachinthamani explains that the word agriculture means the one who rules over water. Agriculture was the primary occupation in ancient India. Nansei plowing took place in the Chola country where the Cauvery flows and the view of the Vaigai and Tamiraparani in pandianad. Cho Dharman has won the 2019 Sahitya Akademi award for his novel Sool, depicting the life of the people in the lower rung of society at Urulaikudi village in Thoothukudi District. The study of Agriculture is called Agricultural Science. Cho Dharman explains Rocky cultivation, Corn cultivation, cotton cultivation and Cereal cultivation methods. The agricultural implements adopted by them in these cultivation methods are described here.

**Key words :** Tamil Novel, Human , Society, Criticism, Cho. Dharman, Farming, Historical, Anthropology, Dhoorvai, Kugai, Sool.

**Refrences**


1. Dhina Thanthi , Madhurai Edition.
2. Sivanappan. R. K ,(2010) Manavari Matrum Tharisu Nilangalil Mazhai Neer Melanmaiyum Vivasayamum, Chennai, NCBH.
3. Cho Dharman - Dhoorvai, Kugai, Sool Navels


கடினமான மற்றும் நுணுக்கமான எந்த ஒரு வேலையையும் தொழிலையும் எளிதாக சரியாக குறைந்த காலத்தில் குறைவான வேலை ஆட்களுடன் செய்வதற்கு பல்வேறு கருவிகளை பயன்படுத்துகின்றோம். வேளாண்மை தொழிலும் இதற்கு விதிவிலக்கல்ல இன்றைய வேளாண்மைக்கு தேவையான பல நவீன கருவிகளும் கனரக எந்திரங்களும் கிராமத்திற்கு வெளியே உள்ளன பெரும் தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்பட்டு அதிக விலைக்கு வழங்கப்படுகின்றன இன்று விவசாய உற்பத்தி செலவு அதிகரித்ததற்கு காரணம் இப்ப பெருந் தொழிற்சாலைகள் தான் என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. ஆனால் நம் முன்னோர்கள் காலத்தில் வேளாண்மைக்கு தேவையான அனைத்து கருவிகளும் உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்களும் மாட்டு வண்டி போன்றவையும் உள்ளூரிலேயே குள்ளர்களாலும் தச்சர்களாலும் உள்ளூர் பொருட்களைக் கொண்டு மிகக் குறைந்த செலவில் தயாரித்து வழங்கப்பட்டன இக்கருவிகளையே மரபு வழி வேளாண்மை கருவிகள் என்று அழைக்கின்றோம்.

இந்திய வேளாண்மையில் பசுமை புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு விரைவான மற்றும் அதிகமான உற்பத்திக்காக வீரிய விதைகள் ரசாயன உரங்கள் பூச்சிக் கொள்ளிகள் ஆகையவே நகரங்களில் உற்பத்தி செய்யப்பட்டு மானியங்கள் மற்றும் கடன் வசதிகள் மூலம் கிராமத்தினரிடம் திணிக்கப்பட்டன அவ்வாறே டிராக்டர் டில்லர் போன்ற கருவிகளும் நகரத்து தொழிற்சாலைகளால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன அதனால் கிராமத்தில் உள்ளூர் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட கருவிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடு குறைந்து போய் கிராமத்துக் கொல்லர்களும் தச்சர்களும் வேலை இழந்துவிட்டனர். மரபு வழி வேளாண்மை கருவிகளில் பல பல குலைந்து போய் இருப்பினும் சில கருவிகள் இன்றும் சில கிராமங்களில் பயன்பாட்டில் உள்ளன ஆனால் அவையும் ஒன்பது காலத்து செய்யப்பட்ட பழமையான கருவிகளாகவே உள்ளன.

வேளாண்மையில் களையெடுத்தல் என்பது மிகவும் முக்கியமான பணியாகும் வேளாண்மையில் களையெடுத்தலுக்காக அதிக மனித சக்தியும் பெரும்தொகை செலவிடப்படுகிறது எனவே குறைந்த மனித வளத்தோடு மிக குறைந்த செலவிலும் களை எடுத்தலை செய்வதற்கு கண்டுபிடிக்கப்பட்ட கருவி தான் அருகு வெட்டி. ஒரு அடி நீளம் கொண்ட நான்கு அல்லது ஐந்து கம்பிகளை ஒன்று சேர்த்து அதன் ஒரு பகுதியிலுல் முனைக் கம்பிகளை

கீழ்நோக்கி வளைந்து செய்யப்பட்ட ஒரு கைவிரல்கள் அமைப்பில் தயாரிக்கப்பட்ட முட்கரண்டியே அறுகுவெட்டி ஆகும். சோ. தர்மன் (சாகித்ய அகாடமி விருது பெற்ற படைப்பாளர்) தன்னுடைய சூல், கூகை, தூர்வை என்ற நாவல்களில் வேளாண் கருவிகளின் பயன்பாடுகள் குறித்து கூறியிருக்கிறார். அவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுதல் இக்கட்டுரையில் நோக்கமாக அமைகிறது.

**கொடுங்கோல்**

இக்கருவி சிறியதாக விரும்பினால் ஆங்கில எழுத்து வி வடிவில் அமைக்கப்பட்டு நுனியில் வளைந்த கொக்கி போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது பின்னர் கருவி நீண்ட மெல்லிய மூங்கில் கம்பு அல்லது மரக்குச்சியின் நுனியில் இறுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது முச்சடிகளையும் அவற்றின் கிளைகளையும் நிலத்திலிருந்து பிடுங்கி எடுக்கவோ ஒன்று சேர்ப்பதற்கோ வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கோ மேலும் அச்சடிகளை கொண்டு உயிர்வேலி அமைப்பதற்கோ இக்கருவி மிகவும் பயனுள்ளதாக உள்ளது

**வாங்கரிவாள்**

கிரிமினல் செய்யப்பட்ட சிறிய வளைந்த அறிவால் ஒரு நீளமான மூங்கில் குச்சியின் நுனியில் இறுக்கமாக பிணைக்கப்பட்டு இருக்கும் இக்கருவி மரங்கள் புதர்செடிகளில் இருந்து சிறு கிளைகள் மற்றும் முட்புதர்களை வெட்டி நீக்குவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் மேலும் புளியம்பழம் கொடுக்காப்புளி கருவேலங்காய்கள் போன்றவற்றை பறிக்கவும் இக்கருவி பயன்படுகிறது

**கம்பர் கத்தி**

முதிர்ந்த பயிர்களின் கதிர்களை அறுவடை செய்வதற்கும் வேறு பல அறுப்பு வேலைகளுக்கும் கம்பர் கத்தி பயன்படுகிறது இக்கத்தி உள்ளூரிலேயே கொல்லர்களால் செய்யப்படுகிறது கத்தி இரும்பினாலும் கைப்பிடி மரத்தினாலும் செய்யப்படுகிறது முனை மழுங்கும் போது கத்தியின் அறுப்புப் பகுதி கூதிட்டப்படுகிறது

**புளிக்கொக்கி**

மிகச்சிறியதாக இரும்பினால் மரக் கொப்பையை பிடித்து இழுக்கக்கூடிய வகையில் வளைந்த கொக்கி போன்று இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது நீண்ட மெல்லிய மூங்கில் கம்பு அல்லது மரக்குச்சியின் நுனியில் இறுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது முக்கியமாக புளியம்பழங்களை மரத்திலிருந்து அறுவடை செய்ய இக்கருவி பயன்படுகிறது

**திருகை**

முந்தைய காலங்களில் வீடுகளில் சிறிய அளவில் தானியங்களை அரைத்து மாவாக்குவதற்காக திருக்கை என்ற இந்த எளிய கருவி மிக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது. சமதள பரப்புடைய வட்டமான இரண்டு கருங்கற்கள் ஒன்றின் மேல் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது. மேலே உள்ள வட்டக் கல்லின் நடுப்பகுதியில் தானியங்களை இடுவதற்கான துளையும் அக்கல்லை சுற்றுவதற்காக ஒரு கைப்பிடியும் உள்ளன அவ்வாறு தாங்கிச் சுழற்றக் கீழே உள்ள கல்லின் நடுவில் ஒரு அச்சு உள்ளது மேலே உள்ள கல்லில் உள்ள துளையின் வழியாக தானியங்களை போட்டுக் கொண்டே கைப்பிடியை சுழற்றும்போது தானியங்கள் இரண்டு கற்களுக்கும் நடுவில் அரைக்கப்பட்டு மாவாக்கப்படுகின்றன மின்சாரமாவரைக்கும் இயந்திரங்களின் வருகைக்குப் பின்னர் திருக்கையின் பயன்பாடு பெரும்பாலும் குறைந்து வழக்குழிந்து போய்விட்டது

**கட்டை மாட்டு வண்டி**

இது கட்டை வண்டி என்றும் மாட்டு வண்டி என்றும் அழைக்கப்படுகிறது இவ்வண்டி முழுவதும் உள்ளூர் மரங்களில் இருந்து கிடைக்கின்ற மரக்கட்டையினால் செய்யப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றது இதன் பாரம் ஏற்றும் முக்கிய பகுதி மட்டுமல்லாது இதன் சக்கரங்களும் மரத்தினால் செய்யப்பட்டு சக்கரங்களின் விளிம்பில் இரும்பு பட்டை பொருத்தப்படுகிறது சக்கரங்கள் முதலில் சிறுசிறு வட்டகைகளாகச் செதுக்கப்பட்டு அவற்றைச் சுற்றி நன்கு செந்நிறத்திற்கு பழுக்க காய்ச்சப்பட்ட இரும்பு பட்டை வட்டமாக பொருத்தப்படுகிறது. இது உள்ளூர் மரத்தட்சர்களால் செய்யப்பட்டு விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்காலத்தில் இவ் வண்டியை செய்து தருவதற்குரிய திறமையான நபர்களும் அருகி விட்டனர். பயன்படுத்தும் விவசாயிகளும் இல்லை. விவசாய இடுபொருள்களை வீடு மற்றும் சந்தைக்கு ஏற்றி செல்லவும் தென் தமிழ்நாட்டின் சில கிராமங்களில் விவசாயிகளால் என்றும் இவ்வண்டி பயன்படுத்தப்படுகிறது.

தற்கால நவீன வேளாண் கருவிகளின் வருகைக்கு முன்பு வரை மேற்கூறப்பட்ட மரபு வேளாண்மை கருவிகளைப் போன்ற பல கருவிகளை பயன்படுத்தியே நம் முன்னோர்கள் வளமுடனும் நலமுடனும் வேளாண்மை செய்து வந்துள்ளனர். இது போன்ற மரபு வழி வேளாண் கருவிகள் இன்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் வயது முதிர்ந்த விவசாயிகளிடம் விரைவிக் கிடைக்கின்றன. உணவுக்காக நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்த ஆதி மனிதன் தான் உண்ணக்கூடிய உணவினை ஓர் இடத்தில் உற்பத்தி செய்யத் தொடங்கிய சூழல்தான் வேளாண்மையின் தொடக்க காலமாக கருதப்படுகிறது. பழந்தமிழகத்தில் வேளாண்மை சிறந்த முறையில் நடைபெற்றது என்பதை சங்க இலக்கியப் பதிவுகள் நமக்குச் சுட்டுகின்றன. இன்றைய

மனித சமூகம் தொழில்துறை மற்றும் விஞ்ஞானம் போன்றவற்றில் அபரிமிதமான வளர்ச்சி அடைந்திருந்தாலும் மனிதனின் உணவு தேவைக்கான அடிப்படை வாழ்வாதாரமாக வேளாண்மையே இருந்து வருகின்றது.

தமிழர்களின் மரபு வழி தொழில்களான பனைத் தொழில், மரத்தொழில், மண்பாண்டத் தொழில், நெசவுத்தொழில், தங்க வேலை, கல் தொழில், பாத்திரத் தொழில், சவரத்தொழில், சலவைத் தொழில், இரும்புத்தொழில், வேளாண் தொழில் போன்றவை பன்னெடுங்காலமாக நடைபெற்று வந்துள்ளன. இவற்றில் தொடக்கநிலை மரபு வழி தொழிலாக வேளாண்மையே அமைகின்றது.

**கலப்பை**

சங்க இலக்கியத்தில் கலப்பை நாஞ்சில் என்று சுட்டப்படுவதுடன் அது யானையின் வாயைப் போன்று கொலு உடும்பின் முகம் போன்றும் தோற்றம் கொண்டு அமைந்தது என்றும் பத்துப்பாட்டு நூலான பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. இதனை பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில் என்ற வரியால் அறியலாம் வேளாண்மை செய்யும் நிலத்தில் மேல்மட்ட மண்ணைத் திறந்து இலகுவாக செய்வதற்கு பயன்படும் கருவி கலப்பையாகும். கலப்பையில் மரக்கலப்பை போஸ்ட் கலப்பை சால் கலப்பை ஆகிய கலப்பைகள் பயன்பாட்டில் உள்ளன மரக்கலப்பை மரத்தால் செய்யப்பட்டிருக்கும் இதனை கலப்பகுதி மக்கள் நாட்டுக் கலப்பை என்றும் கார் கலப்பை என்றும் கூறுகின்றனர். இக்கலப்பை பெரும்பாலும் களிமண் நிலப் பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றது. உழவுத் தொழிலில் மிகுதியான அளவில் பயன்படுத்தும் கலப்பையாக மரக்கலப்பை அமைகின்றது. இதில் ஏர்முனை மரத்தால் கூர்மையாக செய்யப்பட்டிருக்கும். இக்கலப்பை வேப்பமரம், வேலமரம் ஆகிய மரங்களால் ஆசாரிகளால் செய்யப்படுவதாகும். கலப்பை செல் அறிக்காமல் நீண்ட காலம் பயன்பாட்டில் இருப்பதற்காக வேப்பமரத்தால் கலப்பை செய்வது மிகுதியாக காணப்படுகிறது. களப்பையின் பாகங்களாக மேழி, நுகத்தடி, ஏற்கால் ஆப்பு, கயிறு அமைகின்றது. கலப்பையில் இருக்கும் கைப்பிடி மேழி எனப்படும். மேழி மரத்தால் செய்யப்பட்டிருக்கும். எருதுகளை ஏரில் பிணைக்க உதவும் மரத்தாலான தடியின் பெயர் நுகத்தடி ஆகும். நுகத்தடியில் இரண்டு பக்கமும் இரு துவாரங்கள் இருக்கின்றன. நுகத்தடியை மாட்டின் கழுத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஒரு துவாரத்தின் வழியாக கயிறு நுழைக்க பெற்று மாட்டின் கழுத்து பகுதியில் கீழ் பக்கம் சுற்றி வந்து மற்றொரு துவாரத்தின் வழியாக வெளியே எடுத்து கட்டப்படுகின்றது. அப்போது கயிறு நழுவி விடாமல் இருக்க ஆப்பு பயன்படுத்தப்படுகின்றது இதை சொருகு குச்சி என்பர். ஏர் உழுவதற்கு தமிழக மக்கள் பொதுவாக காளை மாடுகளையே பயன்படுத்தி வந்துள்ளனர்

**மண்வெட்டி**

வேளாண்மை தொழிலில் கலப்பிற்கு அடுத்தபடியாக மிகுதியான அளவில் பயன்படுத்தப்படுவது மண்வெட்டி ஆகும்.. இதை வேளாண் மக்கள் மம்முட்டி என்றழைக்கின்றனர். மண்வெட்டியின் பாகங்களாக கைப்பிடி, மண்வெட்டி தகடு, மரத்தாலான கைப்பிடி ஆகியவை அமைகின்றன. இது வடிவத்தில் சுமார் ஒன்றரை அடி நீளத்தில் கம்பால் இணைக்கப்பட்டுள்ளது. இந்த கம்பு அல்லது தடி பூவரசு, கொய்யா, நுனா, வேம்பு போன்ற மரங்களால் செய்யப்படுகின்றது. தகடு இரும்பால் செய்யப்பட்டதாக இருக்கும். மண்வெட்டி வாய்க்கால் அமைக்கவும் ஏர் உழுத பிறகு அண்டை வெட்டுவதற்கும் பாத்தி அமைக்கவும் தண்ணீர் மாற்றி விடவும் பள்ளம் தோண்டவும் தென்னை வாழைக்கு மண் அணைக்கவும் வரப்பு வெட்டவும் வேளாண்மையில் பயன்படுத்தப்படுகின்றன.

**களைக்கொட்டு**

பழங்காலத்தில் களை எடுக்கும் கருவி துளர் என்ற பெயரால் அகநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது இதை வேளாண் மக்கள் கலைகொட்டி, கலவெட்டி, களக்கட்டை, கொத்து ஆகிய பெயர்களால் குறிப்பிடுகின்றனர். மண்வெட்டி வடிவத்தில் மிகச் சிறிய அளவில் காணப்படும் இதில் கைப்பிடி இரும்பலான தகடு ஆகியவை அமைகின்றன. இதன் கைப்பிடி ஒன்ற அடி நீளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பயிர் வளர்வதற்கு தடையாக இருக்கும் சிறுபூண்டுகள் சிறிய செடிகள் புல் வகைகள் ஆகியவற்றை நீக்கி பயிர்கள் நன்றாக வளர இது உதவுகின்றன. நன்செய் புன்செய் ஆகிய இருவகை நிலங்களிலும் இக்கருவியின் பயன்பாடு இன்றியமையாததாக அமைகின்றது.

**அரிவாள்**

அரிவாள் விளைந்த பயிர்களை அறுவடை செய்வதற்கும் புள் அறுப்பதற்கும் பயன்படும் கருவியாக அமைகின்றது. இது சங்க இலக்கியத்தில் கொய்வாள் என்று சுட்டப்பட்டுள்ளது. இரும்பு கத்தி மற்றும் கைப்பிடியும் அமையும். அரிவாளின் கைப்பிடி அரை அடி நீளத்தில் எந்த வகையான மறத்தாலும் செய்யப்பட்டதாக இருக்கும். கம்பு, கேழ்வரகு, புல் போன்றவை அறுப்பதற்கு வளைந்த இந்த அரிவாள் பயன்படுத்தப்படுகின்றது.

**பிக்காசி**

களை எடுக்க உதவும் கருவிகளில் பிகாசியும் ஒன்றாகும். பயிர்களில் உள்ள கலைகளை சரியான முறையில் கலைந்து எடுக்க இது பெரிதும் உதவுகிறது. மேலும் இது சவுக்கை வெட்டியபின் வேர்களை கலைந்து எடுப்பதற்கும் மரங்களை பிளப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**கோடாரி**

கைப்பிடி மரத்தால் செய்யப்பட்டிருக்கும். கோடாலியின் வெட்டும் பகுதி இரும்பால் கூர்மையாக செய்யப்பட்டு இருக்கிறது. இது நிலத்தில் உள்ள மரங்களை வெட்டுவதற்கும் வெட்டப்பட்ட மரங்களை இரண்டாக பிளப்பதற்கும் பயன்படுகிறது.

**கடப்பாறை**

இரும்பால் செய்யப்பட்ட கடப்பாறை சுமார் இரண்டு அடி முதல் ஐந்து அடி வரை இருக்கும் தேவைக்கேற்ப பயன்படுத்தலாம் பொதுவாக பள்ளம் போடுவதற்கு கடப்பாறை மக்களால் பயன்படுத்தப்படுகிறது.

**மூங்கில் கழி**

மூங்கில் கழிகளைப் பயன்படுத்தி அவரை, பாகற்காய் போன்ற கொடிகளை ஏற்றுவதற்கும் பந்தல் அமைப்பதற்கும் களத்தில் மக்கள் இதைப் பயன்படுத்துகின்றனர்.

கரிசல் வட்டார எழுத்தாளர்களின் மிகவும் குறிப்பிடதக்க எழுத்தாளராக சோ. தர்மன் அவர்கள் கருதப்படுகிறார். மக்களின் மன உணர்வுகளையும் என்ன ஓட்டங்களையும் அழகாகவும் அழுத்தமாகவும் வேளாண்மைத் தொழிலினூடாக சித்தரித்துக் காட்டுகின்ற படைப்பாளி அவ்விதமே வேளாண் கருவிகளையும் கையாண்டுள்ளார்.


1) ஏ. அமிர்தலிங்கம்,புதுமுறை விவசாயம்

2) தீரன், இயற்கை விவசாய வழிகாட்டி

3) இல.செ. கந்தசாமி தமிழர் வேளாண்மை மரபுகள்

4)இராம. மனோகரன், நாட்டுப்புற வேளாண்மை